# பெண்களுக்காகவே நடக்கும் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி!

# 100 நாள் வேலைத்திட்டத்தில் வேலை இழந்தது இந்து மக்கள் தானே?

## உசிலம்பட்டியில் நடைபெற்ற முதலமைச்சர் பிறந்தநாள் விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!




மதுரை, டிச.29 -

**உசிலம்பட்டியில் நடைபெற்ற முதலமைச்சர் பிறந்தநாள் விழாவில் உரையாற்றிய கனிமொழி கருணாநிதி எம்.பி. "பெண்களுக்காகவே நடக்கும் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி" என்றும் "100 நாள் வேலைத் திட்டத்தில் வேலை இழந்தது இந்து மக்கள் தானே?" என்றும் கேள்வி எழுப்பினார்.**

முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, (27.12.2025) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் தலைமை செயற்குழு உறுப்பினர் இளமகிழன் ஏற்பாட்டில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், பொதுமக்களுக்கு வீட்டு உபயோகப் பொருள்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கி கழக துணைப் பொதுச்செயலாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் அவர் ஆற்றிய உரை வருமாறு:-

"தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே...

இங்கே நம்மையெல்லாம் வரவேற்று பேசிய இளமகிழன், தன்னுடைய அரசியல் பயணத்தை பற்றி பேசி, அவர் எத்தனை ஆண்டுகளாக கழகத்தோடு பயணித்து வருகிறார் என்பது பற்றி எடுத்துச் சொன்னார்.

அவர் அரசியல் வாழ்வு எத்தனை ஆண்டுகளோ அத்தனை ஆண்டுகளாக அவரையும் எனக்குத் தெரியும் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டக் கழகச் செயலாளர் மூர்த்தி அவர்களோடு தனது செயல்பாடுகள் பற்றியும் அவர் இங்கே பதிவு செய்தார்.

அதேபோல எனது வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் சோதனைகள் ஏற்பட்ட அந்த காலகட்டத்திலும் என்னோடு இருந்த தம்பி இளமகிழன் என்பதை இந்த மேடையிலே நன்றியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கூட்டத்துக்கு வந்திருக்கிற சகோதரிகள் அத்தனை பேரும் உவகையோடு வந்து கலந்து கொண்டிருக்கிறீர்கள்.

இங்கே பேசிய அமைச்சர் மூர்த்தி அவர்கள் குறிப்பிட்டு சொன்னார், "இந்தப் பகுதியிலே இருக்கிற பெண்கள் யாரை ஆதரிக்கிறார்களோ, இந்தப் பகுதியிலே இருக்கிற சகோதரிகள் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்று முடிவு செய்கிறார்களோ அவர்கள் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வர முடியும் ஆட்சி பொறுப்பு ஏற்க முடியும்" என்று குறிப்பிட்டார்.

### பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் இயக்கம்!

மற்ற மாநிலங்களை எடுத்துக் கொண்டீர்கள் என்றால் மக்கள் தொகை அடிப்படையிலும் சரி, வாக்காளர் எண்ணிக்கையிலும் சரி பெண்கள் சற்று குறைவாகதான் இருப்பார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் அப்படி இல்லை. இங்கே மேடையில் இருக்கும் அத்தனை பேருக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன், நீங்கள் யாராவது வெற்றி பெற வேண்டும் என்றால் அது பெண்கள் கையில் தான் இருக்கிறது. ஏனென்றால் அதிகமாக வாக்கு வைத்திருப்பது பெண்கள்தான்.

திராவிட இயக்கம் பெண்களின் உரிமைகளை பாதுகாக்க கூடிய இயக்கம். தந்தை பெரியார் தொடங்கி, பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி முதலமைச்சர் வரை தொடர்ந்து பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடக் கூடிய இயக்கம் தான் திராவிட முன்னேற்ற கழகம்.

பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வேண்டும் என குரல் கொடுத்தது திராவிட இயக்கம். அதை செய்து காட்டியது திராவிட முன்னேற்ற கழகம், தலைவர் கலைஞர் அவர்கள்.

அதற்கு முன்பு பெண்களுக்கு சொத்தில் சம உரிமை கிடையாது, ஏன் உரிமையே கிடையாது.

அப்போதெல்லாம் பெண்களுக்கு கல்யாணம் செய்து கொடுத்துவிட்டால், அவ்வளவுதான். திருமண வாழ்வில் ஏதும் பிரச்சினை என்றால் கூட தன்னுடைய வீட்டுக்கு வருவதற்கு கூட அது நம்ம வீடு இல்லையே... நமக்கென ஒரு வீடு இல்லையே என பெண்கள் நினைக்கக் கூடிய நிலை இருந்தது.

### சொத்தில் சம உரிமை!

நாம் வாழ்க்கை முழுவதும் உழைக்கிறோம், ஆனால் நமது பெயரில் அரை சென்ட் நிலம் கூட கிடையாது. இதை உரிமையோடு கேட்கும் நிலை அப்போது இல்லை. ஆனால் அந்த நிலையை மாற்றி, ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் சொத்தில் சம உரிமை உண்டு என்ற நிலையை கொண்டு வந்தது தலைவர் கலைஞர் அவர்கள்.

நீங்கள் சொத்தில் பங்கு கேட்பீர்களோ இல்லையோ... ஆனால் உங்களுடைய அண்ணன்மார்கள் தம்பிமார்கள் எல்லாம், நம் சகோதரி சொத்தில் பங்கு கேட்பாளோ என நம்மை மரியாதையாக நடத்துகிறார்கள் அல்லவா... அந்த மாற்றத்தை ஏற்படுத்தியது தலைவர் கலைஞர் கொண்டு வந்த பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்ற சட்டம்.

அதேபோல் பெண்கள் படிக்க வேண்டும் என்பதிலும் திராவிட இயக்கம் மேற்கொண்ட முன்னேற்ற நடவடிக்கைகள் ஏராளம்.

இன்று நமது முதலமைச்சர் தளபதி அவர்கள் எல்லா மேடையிலும் சொல்கிறார், இன்று இந்தியாவிலேயே உழைக்கக் கூடிய, வேலைக்குப் போகக்கூடிய பெண்கள் தமிழ்நாட்டில்தான் அதிகம். இங்கே 42% பெண்கள் வேலைக்கு செல்கிறார்கள் என்று பெருமையோடு முதலமைச்சர் சொல்கிறார்.

அப்படிப்பட்ட இடத்திற்கு, பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வகையில் நம் மாநிலத்தை கொண்டு வருவதற்கு, அதற்கு முன்பு எத்தனை ஆண்டு கால உழைப்பு இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு காலகட்டத்தில் பெண் பிள்ளைகளே வேண்டாம் என்று நினைத்தார்கள். அதன் பிறகு பெண்கள் படித்து என்ன ஆகப் போகிறது... சமையல் செய்ய கற்றுக் கொடுத்து கல்யாணம் செய்து வைத்தால் போதும் என்ற நிலை இருந்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள், "நீ பத்தாவது வரைக்கும் படி. உனது திருமண செலவை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று திருமண உதவி தொகை திட்டத்தை அறிவித்தார்.

அதன் பிறகு தமிழ்நாட்டில் இருக்கும் பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை பத்தாவது வரைக்கும் படிக்க வைத்தார்கள். அதன் பிறகு, பத்தாம் வகுப்பு படித்து விட்டாலே, பள்ளி இறுதி வரை படித்து முடிக்கட்டும் என 12 ஆம் வகுப்பு வரை படிக்க வைக்கும் நிலைமை தமிழ்நாடு முழுவதும் உருவானது.

### மாணவிகள் படிக்க மாதம் ஆயிரம் ரூபாய்!

அதன் பிறகு நமது அண்ணன் தளபதி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு... அந்தப் பெண்கள் எல்லாம் படித்து விட்டார்கள். பள்ளி இறுதிவரை படித்த அந்த பெண்கள், நான் கல்லூரி சென்று படிக்க வேண்டும். அப்போதுதான் வேலை வாய்ப்புக்கு உதவும். நான் சொந்தக் காலில் நிற்க முடியும் என ஆயிரம் கனவுகளோடு இருந்தபோது... அண்ணன் முதலமைச்சர் தளபதி அவர்கள் சொன்னார்கள், 'கல்லூரி வரை சென்று படிக்க வசதியற்ற மாணவிகள் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்காக அவர்கள் படிக்கும் ஆண்டுகளில் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறேன்' என அறிவித்தார் அண்ணன் தளபதி.

'பொருளாதார வசதி இல்லாததால் படிப்பை நிறுத்த வேண்டும் என்று அவசியம் இல்லை. நீ யாரிடமும் போய் கைகட்டி நிற்க வேண்டாம். நீ கல்லூரி சென்றுவர பேருந்து கட்டணமும் செலுத்த வேண்டாம்"என்று மாணவிகளுக்காக பெண்களுக்காக விடியல் பேருந்து பயணத்திட்டத்தை கொண்டு வந்தவர் நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

இவர்கள் மட்டுமல்ல... வீட்டிலே இருக்கக்கூடிய பெண்கள் நாள் முழுவதும் உழைக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என வழங்குகிற ஆட்சி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சி.

இப்படி பெண்களுக்காகவே நடந்து கொண்டிருக்க கூடிய ஆட்சி, நமது திராவிட முன்னேற்ற கழக ஆட்சி.

### 100 நாள் வேலையை ஒழிக்கும் பா.ஜ.க. அரசு!

ஆனால் ஒன்றியத்தில் இருக்கக் கூடிய பி.ஜே.பி. ஆட்சி இன்று தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருக்கிறார்கள்.

ஒன்றிய அரசியல் காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. அங்கம் வகித்த போது கொண்டு வந்த திட்டம் 100 நாள் வேலைத்திட்டம். கிராமப்புறங்களில் ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை உறுதி செய்யும் அந்த திட்டத்தில், அதிகமாக பங்கு பெற்றது பெண்கள். இதன்படி ஆண்டுக்கு 100 நாட்கள் உறுதியாக வேலை கிடைக்கும்.

இந்த பி.ஜே.பி. ஆட்சி ஒன்றியத்தில் வந்த பிறகு, இந்தியா முழுவதும் யாருக்கும் 100 நாட்கள் வேலை கொடுப்பதில்லை. 40 நாட்கள் வேலை கொடுத்தாலே பெரிய விஷயம் என்ற ஒரு நிலையை கொண்டு வந்தார்கள்.

இப்போது கொண்டு வந்திருக்கக் கூடிய புதிய சட்டத்திலே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்ற திட்டத்திலிருந்து காந்தி பெயரை எடுத்துவிட்டார்கள்.

அதற்கு பதிலாக நம் வாயில் வராத ஒரு பெயர், சொல்லி முடிப்பதற்குள் தலை சுற்றும் அளவுக்கு ஒரு பெயரை வைத்திருக்கிறார்கள். அந்தப் பெயரில் ராம் என வரவேண்டுமாம். இதற்காகவே அந்த பெயரை மாற்றி இருக்கிறார்கள். பெயரை தான் மாற்றினார்கள், திட்டத்தை அப்படியே வைத்தார்களா என்றால் இல்லை.

அந்தத் திட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்தி தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய சகோதர சகோதரிகள், ஏழை மக்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகள் இவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை வழங்கி வந்த அந்த 100 நாள் திட்டத்தை, முற்றிலுமாக நிறுத்துகிற தடை செய்கிற வகையிலான ஒரு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

நாம் இதைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதை என்றைக்கும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால் பி.ஜே.பி.யோடு கூட்டணி வைத்திருக்கிற எடப்பாடி பழனிசாமி, இப்போது முதலமைச்சர் தன்னுடன் ஒரே மேடையில் ஏறி விவாதிக்க வேண்டும் என்று கேட்கிறார்.

### தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்யும் அ.தி.மு.க.!

நான் அவரிடம் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். 'இந்த 100 நாள் வேலைத் திட்டத்தை அழிக்கக்கூடிய அளவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய சட்டத்தை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை தெளிவாக சொல்லுங்கள். சிலர் புதிதாக கட்சி ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மசோதாவை பற்றி எந்த கருத்தும் சொல்லவில்லை.

எல்லாவற்றையும் மாற்றி விடுவோம் என்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் இருக்கும் நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு வேலை வழங்கி வந்த திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்த துணிந்து கொண்டிருக்கிறது.

அதுவும் எப்படி... விவசாய நாட்களில் எல்லாம் வேலை கொடுக்க மாட்டார்களாம். விவசாய நாட்கள் எப்படி கணிக்கப்படும்? விவசாயம் நடைபெறக்கூடிய 60 நாட்கள் என்றால் அந்த 60 நாட்களிலும் ஒவ்வொரு நாளும் வேலை இருக்கிறதா? போய் கழனியில் இறங்கி வேலை பார்க்க முடியுமா? இதைக் கூட புரிந்து கொள்ள முடியாத ஒரு அரசு, இப்போது உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்க கூடிய 100 நாள் வேலையை நிறுத்த வேண்டும் என்று நினைக்கிற அரசு அங்கே இருக்கக்கூடிய ஒன்றிய பா.ஜ.க. அரசு.

நம் பிள்ளைகள் படித்து டாக்டராக கூடாது என்பதற்காகவே நீட் தேர்வை கொண்டு வந்த அதே பி.ஜே.பி.யோடு கூட்டணி வைத்துக் கொண்டு அதிமுக தமிழ்நாடு மக்களுக்கு துரோகம் செய்து கொண்டிருக்கிறது.

### நூறு நாள் வேலையில் இந்துக்கள் பாதிக்கவில்லையா?

அந்த பி.ஜே.பி. தான் இங்கே பெரும்பான்மையாக இருக்கக் கூடிய சகோதர சகோதரிகளை இந்துக்களை நாங்கள் தான் காப்பாற்றுகிறோம் என்று சொல்லி மத கலவரத்தை உண்டாக்க துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சகோதரர்கள் சகோதரிகள், தெளிவானவர்கள். 100 நாள் வேலையில் அதிகமாக பாதிக்கப்படுவது இந்துக்கள். ஏனென்றால் தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக இருப்பது இந்து மக்கள் தான்.

அந்த இந்துக்களுக்கு எல்லாம் வேலை போகிறதே அது தெரியவில்லையா? 100 நாள் வேலைக்கு சென்று கொண்டிருந்த இந்துக்களின் வயிற்றில் அடிக்கும் பா.ஜ.க.வின் உண்மையான முகத்தை தோலுரித்து காட்டக்கூடிய ஒரே தலைவர் நம்முடைய முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள். பாஜகவை ஒவ்வொரு முறையும் எதிர்த்து போராடிக் கொண்டிருக்கக் கூடிய ஒரு ஆட்சி இருக்கிறது என்றால், அது தமிழ்நாடு... தமிழ்நாடு... தமிழ்நாடு... என நாம் பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும்.

தமிழ்நாட்டை பாதுகாப்பான ஓர் இடமாக, பெண்களின் எதிர்காலத்தைப் பற்றி அக்கறை கொள்ளக் கூடிய ஒரு ஆட்சியாக, இளைஞர்களுக்கு ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய ஆட்சியாக, தமிழ்நாட்டை மேலும் மாற்ற வேண்டுமென்றால் இந்த ஆட்சி தொடர வேண்டும்.

நம்முடைய ஆட்சியின் தொடர்ச்சியிலே தான், நம்முடைய முதலமைச்சரின் தொடர்ச்சியிலேதான் நமது இனத்தின் பாதுகாப்பு, நமது மொழியின் பாதுகாப்பு, நமது சுயமரியாதையின் பாதுகாப்பு, நமது இளைஞர்களின் பாதுகாப்பு இருக்கிறது என்பதை புரிந்து கொண்டு வரக் கூடிய தேர்தலில்... நமது அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல நீங்கள் இங்கே தீர்மானத்தோடு தான் வந்திருக்கிறீர்கள் என்பது இந்த சகோதரிகளின் முகத்தை பார்க்கும்போது எனக்கு தெளிவாக தெரிகிறது.

இந்த தீர்மானத்தில் உறுதியோடு இருந்து இந்த வெற்றியை நீங்கள் நிலைநாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்பி. உரையாற்றினார்.

இதில் பத்திரப்பதிவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.